Regd. M. No. 4565

தமிழ் மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு

(TAMIL SIDDHA MEDICAL MAGAZINE)

மலர் 4 | ஜூன் 1944 | இதழ் 6.

ஆசிரியர்:

தமிழ்ப் பண்டிதரும், மருத்துவ பண்டிதருமான

மாங்காடு. வடிவேலு முதலியார்.

உரிமையாளர்:

காரியக்கமிட்டியார் : சித்த மாணவர் கழகம்.

கவர்ன்மெண்ட் இந்திய மருத்துவ பாடசாலை

கீழ்ப்பாக்கம், மதராஸ்.

Printed by P. Govindaraja Pillay at the Rudisill Press,
No. 7, Nallanna Mudaly Street, Royapettah
and Published by C. M. Raja Jegatheesan,
at Govt. School of Indian Medicine, "Hyde Park"
Poonamallee High Road, Kilpauk, Madras.

அநுபவ முறைகள்.

பசுபுலேட்டி கன்னைய-வீரராகவன்.

அப்பிரக வங்கசெந்தூரம்:—

சுத்திசெய்த கருவ வங்கம் பலம் ஒன்று. ஒரு இரும்புக் கடாயில் வங்கத்தை இட்டு எரிக்கும்போது போதுமான ஆவாரம் வேர்ப் பட்டையைச் சூரணம் செய்து உருகும் வங்கத்தில் கிராசம் இட்டுக் கொண்டே தாழும் விழுதால் கிண்டிவர வெட்டையாகும். இதற்குச் சமன் சுத்திசெய்த கிருஷ்ண அப்பிரக நவநீதம் சேர்த்து ஆவாரம் இலைச்சாற்றால் அரைத்து மூன்று புடமும் தாழும் விழுதுச் சாற்றால் அரைத்து மூன்று புடமுமிடச் செந்தூரமாகும். புடத்துக்கு 25 வரட்டி.

நோய் வண்மையும், காலதேசமும் அறிந்து தக்க அநுபானத்தில், தக்க பிரமாணத்துடன் நோய்க்கேற்ற பத்தியம் வைத்தால் நலம். போதுமான நாள் கொடுத்துவர நாசிக்கிரந்தி (நாசாற்புதம்), விஸ்போடகம், மதுமேகம் முதலிய வியாதிகள் நீங்கும்.

வரகரிசி மாத்திரை:—

சுத்திசெய்த வாலைரசம் தோலா ஒன்று. வரகரிசிச் சூரணம் பலம் ஐந்து. இரண்டையும் கூட்டிச் சுத்த ஜலம்விட்டு நன்றாயரைத்துச் சுண்டக்காய்ப் பிரமாணம் உருட்டி, நிழலிலுலர்த்தி பத்திரப் படுத்தவும்.

காலை மாலை ஒவ்வொரு மாத்திரை வீதம் வாயிலிட்டு விழுங்கிப் பால் சாப்பிடவும். இவ்விதம் 15 வேளை, (7½ நாள்) மறுபத்தியம் 7½ நாள் ஆக இப்பதினைந்து நாளும் உப்பு, புளி, கடுகு, நல்லெண்ணெய் முதலியவற்றை நீக்கிப் பால், வெந்நீர், சர்க்கரை, சாதம் இவை மட்டிலும் சாப்பிட்டுப் பத்தியம் காக்க.

கருமேகம், படை, சொறி, நுணுக்காய்க் கிரந்தி, கண்டமாலை, திமிர் முதலியன நீங்கும்.

மறைவு

டாக்டர் எம். காளையப்பன், எல்.ஐ.எம்.

இராச பாளையம்.

அவர்கள் இறந்துவிட்டதாக அவருடைய நண்பர் டாக்டர் கே. எஸ். பி. ராஜன், எல்.ஐ.எம். மூலம் தெரியவந்தது. எங்களுடைய வருத்தத்தை அன்னாருடைய உறவினருக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

சித்தமாணவர்.

தமிழ் மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு

மலர் 4 | ஜூன் 1944 | இதழ் 6

கண்

(44-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்ணின் தொழில்

1. கட்புலனுக்கு வெளிச்சம் அவசியம் வேண்டியதாகையால் நாம் கண்ணிலுள்ள பல பகுதிகளினது, பிரயோஜன மின்னதென்று அறியும்பொருட்டு வெளிச்சம் செல்லும் ஒழுங்குப் பிரமாணம் இன்னதென்று முதலில் அறியவேண்டும்.

அவையாவன :—

1. ஒளியானது ஒரேவஸ்துவுக்குக் கூடாகப் பாயும் பொழுது சரி நேர்வழியாகச் செல்லும்.
2. ஒரு வஸ்துவிலிருந்து திண்மையளவிலே விகற்பமான பின்னொரு வஸ்துவுக்குக்கூடாக ஒளிசெல்லும் பொழுது அதின்போக்கில் மடங்கி அல்லது வளைந்து செல்லும். இப்படி ஒளிவளைந்து செல்வதற்குக் கதிர் மடங்கல் அல்லது வக்கிரீகரணம் என்று பெயர்.
3. ஒரு வஸ்துவிலிருந்து அதின் கிரணங்கள் எவ்வளவு தூரமாய்ப் பாயுமோ, அவ்வளவாக அவைகள் ஒன்றுக்கொன்று அகன்று விரியும்.
4. ஒரு வஸ்துவிலிருந்து கிரணங்கள் கண்ணுக்குள்ளே செல்லும்பொழுது ஒன்றுக் கொன்று கத்தரிக்கோல் போல் குறுக்கிட்டுச் செல்லும். இதனால் இவ்வஸ்துவின் உருவம் அடிதலைமாறி கண்ணின் பிற்பக்கத்திலுள்ள தரிசியத்திலே (Retina) விழுகின்றது.

2. இனிக் கண்ணிலுள்ள அந்தந்தப் பகுதிகளின் பிரயோசனம் இன்னின்னதென்று காட்டுவாம். கண்ணிலுள்ள மூன்று கவசங்களாகிய சவ்வுகள் கண்ணுக்கு ஆதாரமாகி அதற்குள்ளிருக்கும் மகா நொய்ய பதார்த்தங்களைச் சேதப்படாமல் காக்கின்றன.

3. கண்ணிலே மட்டும் மிஞ்சுவெளிச்சம் படாதபடிக்கும், அதிலே தூசி முதலானது விழாதபடிக்கும், அதற்குள்ளே வியர்வையொழுகாதபடிக்கும் கட்புருவங்களும், கண்மடல்களும் காக்கின்றன.

4. கண் மூடியிருக்கும்பொழுது கண்ணிமைகள் ஒன்றுடனொன்று பின்னித் தூசு முதலியன கண்ணுக்குள்ளேபோய் அதைக் கெடுக்காதபடிக்குக் காவல் செய்கிறதுமன்றி கண்ணுக்கு அலங்காரமாயு மிருக்கின்றன.

5. கண்மடல்கள் கண்ணைமூடி அதிலே தூசி முதலியவையும், அளவுக்கு மிஞ்சிய ஒளியும், விழாதபடிக்கு காவல் செய்கின்றன. அவைகளுக்குள்ளிருக்கும் கண் விழிகள் ஓரே பசுமையாயிருக்கத் தக்கதாக அவைகளினுட் பாகங்களிலிருந்து ஒருவகை நீர் பொசிகின்றது.

6. கட்குழியின் மேல்விளிம்புக்குள்ளே கடைக்கண் பக்கமாக இருக்கும் கண்ணீர்க் கோளத்திலிருந்து கண்ணீர் பொசிந்து சில துவாரங்களின் வழியாய் கண்ணிலே பரந்து அதை எப்பொழுதும் பசுமையாகவும் பளபளப்பாகவும் இருக்கச் செய்கின்றது.

7. மேலும் இந்நீர் கண்ணில் பரந்து பாயும் வேளையில் இமை கொட்டுவதினால் அங்கிருக்கும் தூசிகள் அக் கண்ணீருடன் அள்ளுண்டு மூக்குக் கடிக்க கண் மடலினுட் கோளையிலிருக்கும் இரண்டு சிறு குழல்களின் வழியாய் மூக்கிலே செல்லுகின்றன. கண்ணிலே அழற்சிகாணும் பொழுதும், மனதிலே சஞ்சலமுண்டாகும் வேளையிலும், கண்ணீரானது அவ்விரண்டு குழல்களிலே செல்லக்கூடியதற்கு மிஞ்சி ஊறுவதினால் அதிகமாய்த் தும்மலுண்டாகி அங்கிருந்து வடிகின்றது.

8. உருவொளியான சிருங்கையும் சுவச்சங்களும், ஒன்றுக்கொன்று வித்தியாசமான திண்மையுள்ள வஸ்துக்களாயிருக்கின்றன. இவ்விதமாக உண்டாக்கப் பட்டிருக்கும் கண்ணினுலே நாம் பொருள்களைப் பார்க்கும்பொழுது அப்பொருள்களிலிருந்து வரும் ஒளிக்கதிர்கள் மடங்கிக்கூடித் தரிசியத்திலே அப்பொருள்களின் உருவங்கள் சிறியவைகளாகவும் அதிக தெளிவாகவும் விழுகின்றன. இப்படி அதிலே விழுந்த உருவங்களால் ஆகும் உணர்ச்சி பார்வை நரம்பு வழியாய் மூளைக்குச் சென்று அதில் அழுந்த, மனம் அவைகளை அறிந்து கொள்ளுகின்றது.

கண்களுக்குக் கண்ணாடி.

1. நாற்பது வயதிற்கு மேற்பட்டவர்களின் கண்களில் சிருங்கையும், இயவமும் தட்டையாவதியற்கை யாதலால் பொருள்களின் உருவம் தரிசியத்திலே சரியாய் விழாமல் அதற்கப்பால் நடந்து செல்ல, வெள்ளெழுத்துண்டாகின்றது. குவிவான கண்ணாடி (convex) போட இக்குறைதீரும்.

2. ஈஸ்வர சிருஷ்டி யாகவே சிலருக்குச் சிருங்கையும், இயவமும் மட்டுக்கு மிஞ்சிக் குவிவாயிருப்பதுண்டு. அத்தகையோர் கண்களின் பார்வைக்கு குறுகிய பார்வை (shortsight) என்பார்கள். இவர்கள் பொருள்களைப் பார்க்கும்போது பொருள்களிலிருந்து யாயும் ஒளிக்கதிர்களினால் ஆகும் அப்பொருள்களின் உருவம் தரிசியத்திற்படாமலும், அதற்கு எட்டாமலும் விழுவதால் கவிவான (concave) கண்ணாடி போட இக்குறை தீரும்.

கண்ணைப் பாதுகாக்கும் முறை.

இருட்டான இடத்திலிருந்துவிட்டுச் சடுதியிலே ஒரு வெளிச்சமான இடத்திலே போதல் கூடாது. ஆகாயத்திலுண்டாகும் மின்னலைப் பார்த்தலுமாகாது. காரணம் யாதெனில் கண்ணுக்கு ஒளி மிஞ்சினால் தாரை சிறுக்கத்தக்கதாக வருணி விரியும். ஒளி கொஞ்சமானால் தாரை பருக்கத்தக்கதாக வருணி சுருங்கும். ஆதலால் நாம் மிகுந்த ஒளியிலிருந்து குறைந்த ஒளிக்குச் சடுதியிற்போம்பொழுது பார்வைக் குறைவும், குறைந்த ஒளியுள்ள இடத்திலிருந்து அதிகப் பிரகாசமான ஒளியிருக்கும் இடத்திற்குப் போம்பொழுது மிகுந்த கூச்சமும் உண்டாகின்றது. சடுதியில் அதிக வெளிச்சத்தைப் பார்க்கும்போது வருணியானது அளவுக்குமிஞ்சி விரியுமானால், கண் பார்வையை யிழந்துபோம். இக்காலத்திலுண்டாகி இருக்கும் காந்த வெளிச்சம் கண்ணுக்குக் கூடாவாம்.

பொருள்களைப் பார்க்கும்பொழுது சாய்வாய்ப் பாராமல் கூடிய மட்டும் நேராய்ப் பார்க்கவேண்டும். ஏனெனில் சாய்வாய்ப் பொருள்களைப் பார்க்கில் கண்ணின் பேசிகள் ஒரு பக்கமாய்ச் சுருங்கி வாக்குக் கண்ணாகக்கூடும். குழந்தைகளுக்கு இப்பழக்கம் ஏற்படுமேயானால் சிக்கிரம் இம்மோசத்திற்கு இடமுண்டாகும்.

இந்நூலிலுள்ள அருஞ் சொற்கள்.

இயவம் —(இருபுறமும் குவிந்த கண்ணாடி) கண்ணுக்குள்ளே வட்டித்திருக்கும் இருபுறமும் குவிந்த பளிங்கு போன்ற நீர்.

கடினை —(கடினம்-கடுமை) கண்ணினுள்ள மூன்று சவ்வுகளில் வெண்மையான வெளிச்சவ்வு.

சிருங்கை —(Cornea) (சிருங்கம்-கொம்பு) கண்விழியின் முற்பகுதியிலே மினுக்கமாய் பிதந்து தோற்றுஞ் சவ்வு. அது அழுத்தத்தில் விலங்கின் கொம்பை ஒத்திருப்பதால் அதற்குச் சிருங்கை என்று பெயராயிற்று.

சுவச்சம் —(Humor) கண்ணிலுள்ள மூன்று நீர்களுக்கும் பொதுப் பெயர்.

தாணிசம் —(Choroid) அநேக நுண்ணிய இரத்தக்குழல்கள் பின்னுகிறதினாலாகிய கண் விழியின் இடைச் சவ்வு.

தாரை —(Pupil) கண் மத்தியிலிருக்கிற கரும் புள்ளி. இது கறுத்த விழியிலிருக்கும் வருணியிலுள்ள துவாரம்.

படிகம் —(Vitreous Humor) (படிகம்-பளிங்கு) கண்ணிலே மிகுந்திருக்கும் பளிங்குபோன்ற நீர்.

பரிதிகம் —(Ciliary body) வட்டம். கண்ணுக்குள்ளே இயவத்தின் விளிம்பைச் சூழ்ந்திருக்கும் வட்டச் சவ்வு.

பேசி —(Muscle) உடம்பிலுள்ள அசைவுகளுக்கு காரணமான கருவி.

வக்கிரீ கரணம்—(Refraction) வஸ்துவில் ஒளியானது கூடாகச் செல்லுகையில் அதன் திண்மை விகற்பத்தினால் கதிர் மடங்கல்.

வருணி —(Iris) கண்களுக்கு விகற்பமான நிறங்களை கொடுக்குங் கறுத்தவிழிக்குளுள்ள வட்டித்த சவ்வு.

வனம் —(Aqueous Humor) கண்ணின் மூன்று சுவச்சங்களுள் முற்பகுதியிலிருக்கும் சலவடிவான நீர்.

தரிசியம் —காணப்படுவது. தரிசனீயம் என்பதுவும் அதுவே.

தமிழ் மருத்துவப் பொழிலின் வளர்ச்சிக்காக நன்கொடை அளித்த பெரியார்களின் பெயர்

டாக்டர், ஆ. குமாரசாமி, போளூர் ரூ. 5—0—0

மூல மருந்து

மாங்காடு – வடிவேலு முதலியார்.

வராகபட் சனிகடுக்கா யசம தாகம்
வால்மிளகு சுக்குகணை யாறுமுத லொன்று
தராசுநிறை கைசாவகைப் பொடிமை செய்து
சருக்கரையு நெய்யும தெடைக்கெடை கொடுத்து
பராவிரு தினப்பருவ நையுற வரைத்துப்
பயறளவு செய்துநிழ லூடுற வுலர்த்தி
இராவிழி துயிற்பொழுதி லொன்றொன்ற யின்றால்
ஈரைந்து மூலமவை யிராவே யிராவே.

(க-ரை.) இவ்வெண்சீர்விருத்தம் மூலநோய்க்குத் தக்க ஒரு மருந்து கூறுகின்றது.

(சொ-ரை) வராகபட்சனி-பன்றிதின்னும் பொருளாகிய கோரைக் கிழங்கு, கடுக்காய் - கடுக்காய்த்தோல், அசமதாகம் - ஓமம், வால்மிளகு - வால்மிளகு, சுக்கு - சுக்கு, கணை - சிறுதிப்பிலி, ஆகிய) ஆறு - ஆறுசரக்குகளில், முதல்-முதற்சரக்காகிய கோரைக் கிழங்கு, ஒன்று-ஒரு எடையும், வகை-மற்ற ஐந்து சரக்குகளும், கைசா-கால் எடையுமாக, தராசு நிறை-தராசால் நிறுத்தெடுத்து, பொடிமை செய்து-நன்றாய் பொடி செய்து, சர்க்கரையும் நெய்யும்-கருப்புச் சர்க்கரையும், பசு நெய்யும், எடைக்கெடை கொடுத்து-சரி எடைகூட்டி, பராவு-பொருந்தின, இருதினப்பருவம்-இரண்டு நாள் வரைக்கும், நைஉற-நன்றாய் நலிந்து மெழுகாப்படி, அரைத்து - அரைத்து, பயறு அளவு-பச்சைப்பயற்றின் அளவு, செய்து-மாத்திரையாகச் செய்து, நிழல்ஊடுற உலர்த்தி-நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு, இரா-இராவில், விழி துயில் பொழுதில்-தூங்கப் போங் காலத்தில், ஒன்று ஒன்று அயின்றால்-ஒவ்வொரு மாத்திரையாக உண்டால், ஈரைந்து மூலம்-பத்துவகை மூலமாகிய, அவை-அந்நோய்கள், இராவே-உண்ணும் அன்றிரவே, இரா-இருக்கமாட்டா.

இவ்வாறன்றி, இராவே இராவே என்பதற்கு-அந்நோய் உடலில் இருக்கவேமாட்டா என்று இருமுறை வலியுறுத்திச் சொல்லப்பட்டதென்றுஞ் சிலர் கூறுவர்.

தி நியோ ரெமடீஸ் மானுபேக்சரிங் கம்பெனி

ராமச்சந்திரபுரம், புதுக்கோட்டை ஸ்டேட்,

—:: தென் இந்தியா. ::—

NEO-GRIPE

நியோ-கிரைப் குழந்தைகள் வன்மையுடனும் நோய் அணுகாமலும் இருப்பதற்கு இது ஒரு முக்கிய ஔஷதமாகும். குழந்தைகளுக்கு ஏற்படும் குடல் சம்பந்தமான வயிற்று வலி, புளிப்பு வாந்தி, அசீரணம், வயறு உப்பிசம் போன்ற வியாதிகளுக்கு இது கை கண்ட மருந்தாம். குழந்தைகள் இருக்கும் ஒவ்வொரு வீட்டிலும் இது இருக்கவேண்டியது மிகவும் அவசியம். குழந்தைகளுக்கென பக்குவமான முறையில் உயர்தர மருந்துகளினால் செய்யப்பட்டது.

NEO-PHLOGESTINE

நியோ-பிளாஜிஸ்டின் இது நிமோனியா முதலிய சுவாசாசய ரோகங்கட்கும், கட்டி, பிளவை, சூலை முதலிய வீக்கங்கட்கும் மேல் பூச்சாக பூச விரைவில் குணம் அளிக்கும். பக்குவமான முறையில் உயர்ந்த ஔஷதங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது.

BABA'S-CURE

பாபாஸ்-க்யூர் இருமல், இளைப்பு. சுவாசகாசம் (Asthma) முதலிய ரோகங்களுக்கு இதை நெருப்பிலிட்டு புகை பிடிக்க தொந்திரவு நீங்கி, உடனே சுகம் காணலாம். இது கைதேர்ந்த முறையில் செய்யப்பட்டுள்ளது.

(இம்மருந்துகள் எல்லா மருந்துகடைகளிலும் கிடைக்கும்.)